**செய்தி வெளியீடு எண்:667** **நாள்: 09.10.2017**

# செய்தி வெளியீடு

## பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் அரிய புகைப்படங்கள் வைத்திருப்போர் செய்தித் துறையில் ஒப்படைக்க வேண்டுகோள்.

தமிழ்நாடு அரசின் சார்பில், பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழா, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பெயரில், கடந்த 30.06.2017 முதல் மதுரையில் தொடங்கி, தொடர்ந்து சீரோடும் சிறப்போடும் மிகுந்த எழுச்சியுடனும் மாவட்ட அளவில் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்நூற்றாண்டு விழாவின் நிறைவு விழா, சென்னையில் மிகவும் பிரம்மாண்டமான விழாவாக நடத்திட அரசின் சார்பில் திட்டமிடப்பட்டுள்ளது.

அவ்விழாவில் நூற்றாண்டு விழாமலர் வெளியிடப்படவுள்ளது. நூற்றாண்டு விழா மலர், புகைப்படத் தொகுப்பு, குறும்படம், டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் பொது வாழ்வு, கலைத்துறை மற்றும் அரசியல் துறை ஆகியவற்றின் அரிய புகைப்படங்கள், கட்டுரைகள், சம்பவங்கள், கவிதைகள் உள்ளடக்கி வெளியிடப்படவுள்ளது. பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் அரிய புகைப்படங்கள் வைத்திருப்போர் தலைமைச் செயலகத்தில் உள்ள செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கீழ் இயங்கும் புகைப்பட பிரிவில் நேரடியாகவோ அல்லது இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, புகைப்படப் பிரிவு, தலைமைச்செயலகம், சென்னை–9 என்ற முகவரியில் அஞ்சல் மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ (jdfieldpublicity@gmail.com) அனுப்பிவைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது. (மேலும் தொடர்புக்கு தொலைபேசி எண்: 9444127340)

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**